# ஒரு திருப்பு முனையின் புள்ளி

## மர்ஹூம் முஹம்மத் காலித் முஹம்மத் ஸவாஹிர்

**(05/06/1942 – 29/01/2017)**

*மர்ஹூம் முஹம்மத் காலித் முஹம்மத் ஸவாஹிர் அவர்கள் ஹெம்மாதகம - பள்ளிப்போர்வைப் பிரதேசத்தில் ஆசாரமான குடும்பத்தில் 05/06/1942ம் ஆண்டு பிறந்துள்ளார். அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர் சேவையில் 33 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். பறகஹதெனிய ஸலபிய்யாக் கலாபீடத்தில் பொதுக் கல்விக்கான அத்திபாரத்தையிட்டவர்களில் மிக முக்கியமானவர்.*

*முஹம்மத் ஸவாஹிர் அவர்கள், ஸலபிய்யாக் கலாபீடத்திலிருந்து முதலாவதாகப் பேராதனைப் பல்கலைகழகம் சென்று, கலைமாணிப் பட்டம் பெற்று, கல்விப் பயணத்தில் உயர் கற்கைக்கான முயற்சியில், ஐக்கிய இராச்சியம் சென்று, ஸலபிகளில் முதலாவது கலாநிதிப் பட்டம் பெற்ற அஷ்ஷைக் M.Z.M. நபீல் ஸலபி அவர்களின் தந்தையாவார்.*

*சமயத் துறைக் கல்வி கற்போர், பொதுக் கல்வியையும் பெற்று, பன்முக ஆளுமையுள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்று வலிமையாகக் குரல் எழுப்பியவர்களில் இவரது வகிபாகம் முக்கியத்துவமுடையதும் நன்றி பாராட்டத்தக்கதுமாகும். ஸலபிய்யாக் கலாபீட மாணவர்களின் பொதுக் கல்வியில் ஒரு திருப்பு முனையின் புள்ளியாக இவர் திகழ்ந்துள்ளார். எனினும், அவர் பற்றி இதுவரை ஸலபிய்யா வரலாற்றின் எந்தப் பதிவுகளிலும் வரவில்லை.*

*எளிமையான வாழ்வும் ஆழ்ந்த ஆன்மீகப் பண்பும் அனைவரையும் மதிக்கும் அவரது குணமும் தூய்மை பேணும் அவரது ஆடை முறையும் அவரது தனித்துவமான அடையாளமாகக் காணப்பட்டது.*

*ஆழ்ந்த தியாகமும், அர்ப்பணித்த வாழ்வும் முற்போக்குச் சிந்தனையும் சமூக மேம்பாட்டு அக்கறையும் கொண்ட அவர் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகப் பேசப்படுகிறது.*



# ஒரு திருப்பு முனையின் புள்ளி

## மர்ஹூம் முஹம்மத் காலித் முஹம்மத் ஸவாஹிர்

**(05/06/1942 – 29/01/2017)**

*எம்.அப்துல் ஹமீத்* (M.A)

*சமூகத்தில் ஆளுமைமிக்க பலர் தமது குடும்பச் சுமைகளையும் தான் சார்ந்த பொறுப்புக்களையும் மட்டும் சுமந்து, வாழ்வதோடு, இவ்வுலகை விட்டு மறைந்து விடுகின்றார்கள். அவர்களின் மரணத்தோடு, அவர்களின் நினைவும் மறைந்துவிடுகிறது.*

*மனிதர்களில் சிலர் தமக்காக மட்டும் தமது வாழ்வைச் சுருக்கிக் கொள்ளாமல், தாம் வாழும் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பங்களிப்புச் செய்கிறார்கள். அத்தகையவர்களின் தடயங்கள் வரலாற்றில் பதிவாகி விடுகிறது. அவர்களினால் பயனடைந்த மனிதர்களும் அவர்களை நன்றியோடு நினைத்துப் பார்க்கின்றார்கள். அத்தகைய நன்றியுடன் மறக்காமல் நினைத்துப் பாக்கக் கூடியவர்களில் ஒருவரே மர்ஹூம் அஷ்ஷைக் முஹம்மத் ஸவாஹிர் அவர்கள்.*

*அஷ்ஷைக் முஹம்மத் ஸவாஹிர் அவர்கள், தூர நோக்கு சிந்தனையும் சமூகத்தின் மீதான பற்றும் அகண்ட பார்வையுமுடைய ஆன்மிகப் பக்குவமுள்ளவராகவும் மாணவர்களை பொருத்தமான பாதையில் நெறிப்படுத்தும் ஒரு சிறந்த ஆசானாகவும் ஆக்கத்திறன் மிக்க அதிபராகவும் திகழ்ந்துள்ளார்.*

*ஸலபிகளின் பொதுக் கல்வியில் இவரது வகிபாகம் நன்றியுடன் நினைவுகூர வல்லது. ஆனால், அவர் ஸலபிய்யாக் கலாபீடத்தில் ஆசானாகப் பணி புரிந்ததில்லை. எனினும், ஸலபிய்யாக் கலாபீட மாணவர்களின் பொதுக் கல்வியில் திருப்பு முனையின் ஒரு புள்ளியாக அவர் திகழ்ந்துள்ளார். அந்த திருப்பு முனைக்கான நிகழ்வு இதுவரை ஸலபிய்யாவின் எந்தப் பதிவுகளிலும் வரவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.*



*முஹம்மத் ஸவாஹிர் அவர்கள், போராதனைப் பல்கலைக்கழக அரபு இஸ்லாமிய நாகரிக கற்கைத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி M.Z.M. நபீல் ஸலபி அவர்களின் தந்தை ஆவார். அண்மையில் கலாநிதி M.Z.M. நபீல் ஸலபி அவர்களை அவரது பேராதனைப் பல்கலைக்கழக இல்லத்தில் சந்தித்த போது, அவர் தனது தந்தை பற்றி எம்மிடம் பகிர்ந்து கொண்டார். அவை முக்கியத்துவமுடைய விடயங்கள். எனவே, அவரது தந்தை பற்றி இக்கட்டுரை எழுதப்படுகிறது.*

*ஹெம்மாதகம - பள்ளிப்போர்வைப் பிரதேசத்தில் ஆசாரமான குடும்பத்தில் 05/06/1942ம் ஆண்டு முஹம்மத் ஸவாஹிர் அவர்கள் பிறந்துள்ளார். மடுல்போவவில் இல D. 58ல் வசித்து வந்தார். அவரது பெரிய குடும்பம், கல்விப் பின்புலமும் ஆன்மிக சிந்தனையும் கொண்டு காணப்பட்டுள்ளது. ஸவாஹிர் அவர்களுடைய பாட்டனார் குத்பா செய்யும் தகுதி பெற்றவராக அன்று காணப்பட்டுள்ளார். ஆன்மிகப் பின்னணியும் கல்விச் சூழலும் கொண்ட இவரது குடும்பப் பின்புலம், இவரின் பொது நோக்கிற்கும் ஆன்மிக நடவடிக்கைகளுக்கும் களமாக அமைந்துள்ளது எனக் கருதலாம்.*

*மஹரகம குல்லியத்துல் கபூரிய்யாவில் ஆன்மிகக் கல்வியைப் பெற்றுள்ளார். அக்கல்லூரி அவரது சமய அறிவு நிலையை விசாலப்படுத்தியுள்ளது. அத்தோடு, அங்கு ஆசிரியர்களின் அன்பான மாணவராகவும் திகழ்ந்துள்ளார். அதனால், அங்கு உஸ்தாதாகப் பணியாற்றிக் கொண்டிருந்த உமர்*

ஹஸ்ரத் (ரஹ்) அவர்கள், அவரது கையால் எழுதிய, 300க்கும் மேற்பட்ட குத்பாக்களை உள்ளடக்கிய ஒரு கொப்பியை இவருக்கு அன்பளித்திருக்கிறார். அந்த உரைகள் அடங்கிய கொப்பி பல மவ்லவிகளின் கரம் மாறி, சம்மாந்துறை வரை சென்று, தவறி விட்டது. அந்த கொப்பி தனது தந்தையின் மதிப்புமிக்க சொத்தாகக் கருதி, அவரது மகன் கலாநிதி M.Z.M. நபீல் அவர்கள் தேடிக் கொண்டிருக்கிறார்.

இரண்டு ஆண்டுகள் வெளிகம மத்ரஸதுல் பாரியில் கற்று, அங்குதான் மவ்லவிப் பட்டம் பெற்றிருக்கிறார். அங்கு பெற்ற சான்றிதழ் மூலம் மவ்லவி ஆசிரியர் நியமனமும் கிடைக்கப்பெற்றார். ஆசிரியர் பணியில் தொடராக 33 ஆண்டுகள் சேவையாற்றி (1997.06.05) அன்று (Retired) ஓய்வு பெற்றுள்ளார்.

அரசாங்கப் பாடசாலையில் 1963.10.01. அன்று மவ்லவி ஆசிரியராக முதலாவது நியமனம் பெற்ற போது, அன்று அவர் பெற்ற முதல் மாதச் சம்பளம் 170/- ரூபாய் ஆகும். ஆசிரியர் சேவைக்கான அவரது பதிவு எண் (111282) என்று அவரது சுய விபரக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




இவர்தான் குடும்பத்தில் மூத்தவர். எனவே, குடும்பத்தின் சுமையை தனது தோளில் சுமந்து ஒரு பொறுப்பானவராகச் செயல்பட்டிருக்கிறார். அன்று குறைந்தளவுதான் கற்றவர்களும் ஆசிரியர் பணி புரிந்தவர்களும் எமது சமூகத்தில் இருந்துள்ளனர். அவர்களில் இவரின் வகிபாகம் என்றும் நினைவில் கொள்ளத்தக்க முக்கித்துவம் பெறுகிறது. தனது பிள்ளைகளுக்கும் கல்வியறிவை வழங்கியுள்ளார். அவர்களின் பட்டமளிப்பு நிகழ்வுகளில் கலந்து மகிழ்ந்துள்ளார்.

பாடத்திட்டத்தில் கற்ற விடயங்களோடு நூல்கள், பத்திரிகைகள் வாசித்தல், அறிஞர்கள், மாணவர்கள், நண்பர்கள், பொதுமக்கள், சமூகப் பொது ஓட்டம் என்ற அனைத்தும் கலந்த வாழ்க்கைச் சூழல் ஒரு மனிதனை அறிவு ரீதியாக வளர்த்து, அனுபவத்தை வழங்குகிறது.

அதனால், அவர் சமூகத்திற்கு காத்திரமான பங்களிப்பைச் செய்த பொதுப்புத்தி (Common Sense) உள்ளவர் என்று கருத முடிகிறது.

அவரது சேவை நிகழ்ந்த பாடசாலைகளும் காலமும் அவரது குறிப்புகளில் பின்வருமாறு காணப்பட்டது.

1.KG/DUMMALADENIYA M.V. (1963/10/01- 1969/02/28)

2.C/ MATTACKULIYA MUSLIM V.(1969/03/01- 1972/01/16)

3.C/ MALIGAKANDA M.V. (1972/01/17- 1979/01/30)

4.KG / PALLIPPURUWA M.V. (1979/02/01-1979/02/11)

5.KM/ ADDALACHENAI G.T.C. 1979/02/02- 1979/06/30

6.KG/ ALAPITIYA K VIDYALAYA (1979/07/01- 1979/07/04)

7. KG / PALLIPPURUWA M.V. (1979/07/01-1979/07/04)

8.KM/ ADDALACHENAI G.T.C. 1980/01/01- 1979/07/04)

9.R/ EHALOYAGOOD AL- AQSA M. V. (1997/06/05)

*1989/06/01 முதல் 1997.06.05 அன்று ஓய்வு பெறும் வரை அதிபராகப் (Principal) பணியாற்றியுள்ளார்.*

*அவர் ஆன்மிக வழியில் மக்களை நெறிப்படுத்தும் மகத்தான பணியையும் பல்வேறு சமூக சேவை நடவடிக்கைகளையும் ஆற்றியுள்ளார் என அவரது மகன் நபீல் அவர்கள் குறிப்பிடுகின்றார். நல்ல குணப் பணபும் அமைதியான சுபாவமும் கொண்டவராக இருந்துள்ளார்.*



*2000ம் ஆண்டுகளில் நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டு மாணவராக கற்றுக் கொண்டிருந்த வேளை, மடுல்போவை மர்கஸிலும் அங்குள்ள பாடசாலையிலும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தேன். அப்போது, அவரை வார இறுதி நாட்களில் சந்தித்திருக்கின்றேன். வீட்டுக்கு அழைத்துச் சென்று நன்கு உபசரிப்பார். விருந்தினர்களைக் கண்ணியப்படுத்தும் உயர்ந்த பண்புள்ளவராக அவரைக் காண முடிந்தது.*

*1983ம் ஆண்டு ஸலபிய்யாக் கலாபீடம் ஆரம்பிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டுகளில் பெற்றோர் - ஆசிரியர் கூட்டம் ஸலபிய்யாவில் நடைபெற்றது. அதில் முஹம்மத் ஸவாஹிர் அவர்கள் கம்பீரமாகவும் உறுதியுடனும் ஒலித்த குரல்தான் ஸலபிய்யாவின் பொதுக் கல்விக் கோட்பாட்டில் மாற்றத்திற்கான அத்திபாரமாக அமைந்தது.*

*அக்கூட்டத்தில் பேசிய அவர், "ஸலபிய்யா மாணவர்கள் பொதுக் கல்வியைப் பெற நிருவாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி, கல்விப் பொதுத் தராதர உயர் தரமும் கற்று, சமயத் துறையில் சேவை இவர்கள் வெளிவந்து,பல்கலைக்கழகம் சென்று உயர் கல்வி பெற்று, உயர் பதவிகள் பெற்று, சுயமாக தொழில் செய்து, கௌரவத்துடன் வாழ வேண்டும்" என்பதை வலியுறுத்தியுள்ளார். பள்ளியில் ஆன்மீக செயல்பாடுகளை வழிநடாத்தும் மவ்லவிகள் அதை ஒரு தொழிலாக ஆக்காமல், சுய உழைப்பில் தஃவாப் பணியாற்ற வேண்டும் என்ற கருத்தை அவர் அழுத்தமாக அன்று பதிவு செய்ததோடு,பொதுக் கல்வியைப் புறக்கணிப்பது, முஸ்லிம் சமூகத்தை தேக்க நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.*

*அன்று அந்தக் கூட்டத்தில் பல பாகங்களிலுமிருந்து வருகை தந்திருந்த பழுத்த பலர் இவரது கருத்துக்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர்.*

*அப்துல் ஹமீத் பக்ரி (ரஹ்) அவர்களின் நோக்கம், மூட நம்பிக்கைகளை ஒழித்து, ஏகத்துவத்தை நிலைநாட்டுவதாகவே இருந்தது. எனவே, பொதுக் கல்விக்கும் இங்கு முக்கியத்துவம் கொடுத்தால், அந்த நோக்கம் கெட்டுவிடும் என்று கண்டனக் குரல்கள் அழுத்தமாக எழுந்தன.*

*குறிப்பாக கல்முனை பிரதேசத்தை சார்ந்தவர்கள் இவரது குரலுக்கு எதிராக தங்கள் குரல்களை உயர்த்தியுள்ளனர். அப்போது இஷாத் தொழுகைக்கான நேரம் வந்ததால், தொழுகையின் பின்னர் கூட்டம் தொடர இருந்தது.*

*தமிழ் மொழி கற்பிக்கும் ஏ.எம்.ரபீக்* (B.A.Hons, Dp in Edu) *ஆசிரியர் அவர்கள் அவர் யார்? என்று முஹம்மத் ஸவாஹிர் பற்றி விசாரித்துள்ளார். அவர் எனது தந்தைதான் என்று ஸலபிய்யாவில் மாணவராகக் கற்றுக் கொண்டிருந்த நபீல் அவர்கள் சொல்லியுள்ளார். தேவையான விடயத்தைப் பேசியுள்ளார். அவருக்கு ஆதரவாக நான் பேசுவேன் என்று ரபீக் ஆசிரியர் கூறியுள்ளார்.*

இஷாத் தொழுகையின் பின் மீண்டும் ஆரம்பமான கூட்டத்தில், ஸலபிய்யாவில் பொதுக் கல்வி பற்றிய விவாதம் அனல் பரக்க ஆரம்பித்தது. முஹம்மத் ஸவாஹிர் அவர்களது கருத்து காலத்தின் தேவையை உணர்த்துகிறது என்பதை விளக்கி, அக்குரலுக்கு ஆதரவாக ரபீக் ஆசிரியர், முஸ்தபா மவ்லானா ஆகியோரின் குரல்கள் வலிமையாகவும் வலுப்படுத்துமுகமாகவும் எழுந்தன.

அப்போது, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதலாமாண்டு மாணவனாக கற்றுக்கொண்டிருந்த, இப்போதைய செயலர் ஏ.எல்.கலீலுர் ரஹ்மான் அவர்கள் இது தேவையான ஒன்று. எனவே, GCE(O/L) பரீட்சை எழுத அனுமதி தருமாறு கோரி, கடிதம் எழுதி முதீரிடம் கொடுக்குமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கியதோடு, ஒரு கடிதத்தையும் எழுதிக் கொடுத்திருக்கிறார். அக்கடிதத்தை அழகிய கையெழுத்தில் சகோ.M.H.M. பவ்ஸி(பறகஹதெனிய) பிரதியிட்டு, First Batchல் கற்றுக் கொண்டிருந்த அனைத்து மாணவர்களும் கையொப்பமிட்டு, முதீரிடம் சமர்ப்பித்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

. உடனே, இதற்கு அங்கீகாரம் கிடைக்காவிட்டாலும், பொதுக் கல்வியின் தேவைப்பாட்டை நன்கு உணர்ந்த கலாபீட நிருவாகம் அங்கீகாரம் அளித்தது.

புதிய உலம் வேண்டி நிற்கும் நவீன கல்வி, தர்க்க முறை சார்ந்த சிந்தனை, பகுத்தறிவுப் பார்வை என்பவற்றிற்கு முன்னுரிமை தரும் கல்வியும் மத்ரஸா மாணவர்கள் பெற்றுத் திகழ வேண்டுமென்பதை பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் அவர் வலியுறுத்தியுள்ளார். அவரது கனதியான கருத்து செல்வாக்குச் செலுத்தி, இன்று விரிந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸலபிய்யாவில் கற்றவர்கள் பல்வேறு துறைகளில் இன்று மிளிர்வதற்கு, முஹம்மத் ஸவாஹிர் அவர்களுடைய அன்றைய குரல் காரணமாக அமைந்தது. அல்லாஹுத்தஆலா அவரது எல்லா நல்அமல்களையும் பொருந்தி, சுவனச் சோலையை வழங்குவானாக என்று நாம் நன்றி உணர்வோடு அவருக்காகப் பிரார்த்திப்போமாக!

மூடநம்பிக்கையில் மூழ்கிக் கிடந்த மக்களை நெறிப்படுத்த முனையும் ஆன்மீகக் கல்வியாளர்களுக்கு பொதுக் கல்வியும் சமவிகிதத்தில் தேவை என்பதை முஹம்மத் ஸவாஹிர் அவர்கள் நன்கு உணர்ந்திருந்துள்ளார். இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு நவீனத்துவப் பண்புமிக்க இஸ்லாமியத் தீர்வை முன்வைக்கப் போகும் ஸலபிய்யாவின் பட்டதாரிகளுக்கு பொதுக் கல்வி மிக முக்கித்துமிக்கது என்ற அவரது குரல் எதிர்ப்புகளுக்கு உள்ளாகினாலும் பெரிய மாற்றங்களுக்கு வழிவகுத்தன. அதனால், எங்கள் உள்ளங்களில் அவர்மீதான நன்றி உணர்வு அதிகரித்திருக்கிறது. அஷ்ஷைக் முஸ்தபா மவ்லானா, ரபீக் ஆசிரியர், அஷ்ஷைக் முஹம்மத் ஸவாஹிர் ஆகியோரின் மண்ணறை வாழ்வும் மறுமை வாழ்வும் மகிழ்ச்சியாக அமைய நாம் அனைவரும் அவர்களுக்காக பிரார்த்திப்போம்.

பொதுக் கல்வியுனுடைய தேவையும் நோக்கமும் நன்கு உணர்த்தப்பட்ட பின்னர் அதை அங்கீகரித்து, இன்றுவரை ஸலபிய்யாவின் கல்வி வளர்ச்சிக்காக எல்லா வகையிலும் பங்களிப்பாற்றிவருகின்ற அனைவருக்கும் எமது நன்றிகள் என்றும் உரித்தாகட்டும்.

